**CC** 31/2023

06.05.2024

**ம.சா.1 <u>செல்வகுமார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். அதற்கான உரிமம் வைத்துள்ளேன். இருசக்கர வாகனத்திற்கு பைனான்ஸ் புதுவயலில் புது பேரூந்து நிலையத்தில் நடத்தி வருகிறேன். உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் தனிநபர்களுக்கு கடன் கொடுத்து வருகிறேன் என்றால் சரிதான். நான் நடத்தி வரும் பைனான்சின் பெயர் உய்யவந்தம்மன் இருசக்கர வாகன பைனான்ஸ். எதிரி சலூன் கடை நடத்தி வருகிறார். எதிரியை எனக்கு எப்படி பழக்கம் என்றால் எதிரியின் சலூன் கடைக்கு முடி வெட்டச் செல்லும்போது பழக்கம். நான் தற்போது ஊரவயலில் வசித்து வருகிறேன். காரைக்குடியில் இரயில்வே ஆர்ச்சிலிருந்து அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உள்ள அழகர்மலையான் பைனான்ஸ் யாருடையது என்றால் என்னுடையதுதான்.

2) நான் காரைக்குடியில் பைனான்ஸ் வைத்திருக்கிறேனா என்று கேட்டபோது புதுவயலில் பைனான்ஸ் வைத்திருப்பதாக சொன்னேன் என்றால் சரிதான். காரைக்குடியில் உள்ள பைனான்சிற்கு உரிமம் உள்ளது. அதுவும் இருசக்கர வாகன பைனான்ஸ் ஆகும். அந்த உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனது மாத வருமானம் என்னவென்றால் சுமாராக ரூ. 1 லட்சம் வருமானம் கிடைக்கும். நான் வருமான வரி செலுத்திவருகிறேன். வருமான வரி ஆவணத்தை பார்த்தால் எதிரிக்கு கடன் கொடுத்த விபரம் தெரியும் என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எதிரிக்கு இதுவரை எத்தனை முறை கடன் கொடுத்திருக்கிறேன் என்றால் பலமுறை கொடுத்திருக்கிறேன்.

3) வரவு செலவு கணக்கு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. எதிரியின் குடும்பத்தில் வேறு நபர்களுக்கு கடன் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரியின் தயாருக்கு 2014 ம் ஆண்டு ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் இல்லை. எதிரியின் தாயார் வாங்கிய கடனிற்கு எதிரி வட்டியும் அசலுமாக 8 வருடங்களாக செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு கடனிற்கு முன்பு எதிரியிடம் கடன் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் நினைவில்லை. எதிரி எனக்கு போன் மூலமாக Gpay, Phone Pay, வங்கி கணக்கு மற்றும் நேரடியாக இது வரை எவ்வளவு பணம்

செலுத்தியுள்ளார் என்றால் சுமார் 7, 8 வருட பரிவர்த்தனையில் எனது வங்கி கணக்கில் செலுத்தியிருக்கிறார். இவ்வழக்கு கடனிற்காக செலுத்தவில்லை. நான் 1 சதவீத கணக்கில் வட்டி வாங்குவேன்.

4) நான் வட்டி கணக்குவழக்கு பாராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. எதிரியை தவிர வேறு எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்திருக்கிறேன் என்றால் வேறு நபர்களுக்க கொடுக்கவில்லை. இருசக்கர வாகன பைனான்ஸ் மட்டும் செய்து வருகிறேன். எத்தனை காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இவ்வழக்கிற்கு முன்பு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. என் மீது குற்ற வழக்குகள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. எதிரியின் தாயாருக்கு பதிவு செய்து கடன் கொடுத்திருக்கிறேன் என்றால் அது இதற்கு முன்பு 7, 8 வருடங்களாக செய்த கடன் பரிவர்த்தனை ஆகும். இவ்வழக்கு கடனிற்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அதுவும் பதிவு ஆவணங்கள் மூலம் கொடுத்திருப்பேன் என்றாலும் இவ்வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 1 காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் பூர்த்தி செய்து எடுத்துவந்த காசோலையை எதிரி என் முன்பாக கையொப்பம் செய்து கொடுத்தார். காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரியின் தாயாருக்கு கொடுத்த கடனுக்காக இவ்வழக்கு காசோலை உட்பட இதற்கு முன் உள்ள காசோலை எண் மற்றும் வழக்கு காசோலைக்கு பின் அடுத்த எண் கொண்ட காசோலையுமாக மொத்தம் 3 காசோலைகள் பூர்த்தி செய்யாமல் கையொப்பம் செய்த காசோலைகள் மற்றும் 20 ரூ பத்திரத்தில் கையொப்பம் மட்டும் செய்து வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. எனது வழக்கின் படி எதிரிக்கு கொடுத்த தொகைக்கு எதிரி காசோலை கொடுத்த தேதி வரை வட்டி எவ்வளவு என்றால் ரூ. 50 ஆயிரம் ஆகும்.

6) மேற்படி வட்டி கணக்கு தவறு என்றாலும், எதிரி வட்டி கணக்கு செய்து காசோலையை பூர்த்தி செய்து எடுத்துவந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் காசோலை எதற்காக மறுக்கப்பட்டது என்றால் பணம் இல்லை என்று மறுக்கப்பட்டது. எதிரியிடம் இது குறித்து கேட்டபோது டிசம்பர் மாதத்தில் மீண்டும் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யசொன்னார். 19.09.2022 அன்று எதிரி எனது காரைக்குடி பைனான்சிற்கு வந்து காசோலைகள் மற்றும் ரூ.20 பத்திரத்தை கேட்டபோது நான் எதிரியை தாக்கி அதன்பேரில் எதிரி புகார் கொடுத்து காரைக்குடி வடக்கு காவல்

நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆனேன் என்றால் நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த பின்னர் எதிரியியால் அப்புகார் அளிக்கப்பட்டது. 21.09.2022 அன்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் எதிரி புகார் அளிப்பதற்கு முன்பாகவே நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டேன். நான் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆனேன்.

7) எதிரி கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் என்ன விசாரணை நடைபெற்றது என்றால் விசாரணையில் என்னிடம் காசோலையை கொடுத்து நான் வசூலுக்கு தாக்கல் செய்த பின்னர் எதிரி புகார் அளித்திருப்பதாக நான் காவல்நிலையத்தில் தெரிவித்தேன். விசாரணையின் இறுதியில் என்னை நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள சொன்னார்கள். நான் சொல்வது முற்றிலும் தவறு என்றாலும், கடந்த 21.02.2023 அன்று எதிரி காரைக்குடி காவல்துறை துணைகண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அதன் விசாரணையில் தான் மேற்கூறியவாறு சொன்னார்கள் என்றாலும், எதிரி முதன் முறை வடக்கு காவல்நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் நடந்த விசாரணையில் எதிரியின் காசோலையை திருப்பி தந்துவிடும் படி எனக்கு அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல.

8) இவ்வழக்கு தொடர்பாக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தை நாடினேனா என்றால் இல்லை. வடக்கு காவல் நிலையத்தில் நடந்த விசாரணையையும், காவல்துறை துணைகண்காணிப்பாளர் நடத்திய விசாரணையையும் இவ்வழக்கில் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அறிவிப்பில் எதிரி எந்த இடத்தில் கடன் கேட்டார் என்றும், எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் நான் கடன் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். கடன் தொகையை எங்கு வைத்து யார்முன்னிலையில் திருப்பி கேட்டேன் என்ற விபரமும் அதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

9) புதுவயல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா எனது வங்கி கணக்கை 23.12.2014 முதல் இன்று வரை நான் தாக்கல் செய்து வங்கி மேளாலரை நான் விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எதிரி கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 10.01.2022. மேற்படி தேதிக்கு பின்னர் எதிரி எனது வங்கி கணக்கில் வட்டியோ அசலோ செலுத்தவில்லை என்று எனது சட்ட அறிவிப்பிலும், புகார்மனுவிலும் சொல்லியிருக்கிறேன் என்றால் அவற்றில் சொல்லப்பட்டிருப்பதுதான் உண்மை. மேற்படி தேதிக்கு பின்பும் எதிரி எனக்கு தொடர்ச்சியாக வட்டி

செலுத்திவந்துள்ளார் என்றால் இவ்வழக்கு கடனிற்கு தொடர்பாக செலுத்தவில்லை. முன்பே வாங்கியிருந்த கடனுக்காக செலுத்தியிருக்கிறார்.

10) இவ்வழக்கு காசோலைக்கு பின் அடுத்துள்ள காசோலையை வைத்து தேவகோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கு காசோலையை மட்டும்தான் கொடுத்தார். இவ்வழக்கு காசோலைக்கு முந்தைய காசோலையும் பூர்த்தி செய்யப்படாத 20 ரூபாய் பத்திரமும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி வெளிநாட்டில் வேலை பார்த்து எனக்கு பணம் அனுப்பியிருக்கிறார் என்றால் அது முந்தைய கடன்களுக்காக அனுப்பினார். எதிரியின் தாயார் வாங்கிய கடனுக்காகத்தான் நான் கந்து வட்டி கேட்டதன் பேரில் எதிரி என் வங்கி கணக்கில் அனைத்து தொகையையும் செலுத்தினார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் நேரடியாக எப்போதும் கடன் பெற்றதில்லை என்றாலும், எதிரியின் தாயார் பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலைகளை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் தாயார் வாங்கிய கடனை அசல் மற்றும் கூடுதல் வட்டியுடன் செலுத்திவிட்டு காசோலைகளை எதிரி கேட்டபோது தேடி எடுத்து தருவதாக சொல்லி நான் சாசோலையை மறைத்து வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

11) கடைசிவரை காசோலைகள் மற்றும் ஆவணங்களை தராததால் அதை கேட்டு வந்த போது எதிரியை தாக்கியதால் வடக்கு காவல்நிலையத்தில் எதிரி புகார் அளித்து மனு எண் 887/2022 கொடுக்கப்பட்டு விசாரணையில் காசோலைகளை திருப்பி கொடுப்பதாக கூறிவிட்டு அக்காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.